உ


சிவமயம்

வத்தளை ஹேகித்த

அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

# பாலஸ்தாபன கும்பாபிஷேக

# திருப்பணி மலர்



**23.05.2010**

**ஞாயிற்றுக்கிழமை காலை 7.26 - 9.26**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரையறுக்கப்பட்ட ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

## ஹேகித்த - வத்தளை

# கௌரவ நிர்வாக சபை உறுப்பினர்கள்

**கௌரவ காப்பாளர்கள்**

திரு. K. தமிழ்வாணனன்
திரு. M. சுப்பிரமணியம்
திரு. R. கந்தசாமி

**கௌரவ பொதுக்குழு உறுப்பினர்கள்**

திரு. K. கணேசுஷன்
திரு. M. சண்முகவேல்
திரு. K. சந்திரன்
திரு. A. செல்வராஜா
திரு. M. சிவராமலிங்கம்
திரு. K. பூவலிங்கம்
திரு. V. சுப்பிரமணியம்
திரு. R. நித்தியகுமார்
திரு. N. வீரையா

**கௌரவ செயற்குழு உறுப்பினர்கள்**

திரு. R. ரவி சிவகுமார் - தலைவர்
திரு. V. கங்காதரன் - செயலாளர்
திரு. V. ரவீந்திரன் - பொருளாளர்
திரு. S. ரவிச்சந்திரன் - உப தலைவர்
திரு. S. கணேந்திரா - உப தலைவர்
திரு. S. மகாலிங்கம் - உப செயலாளர்
திரு. P. நவராஜா - உப பொருள்ளாளர்
திரு. V. ஜெயராஜ் - இணைச் செயலாளர்

**கௌரவ செயற்குழு அங்கத்தவர்கள்**

திரு. S.M. ஜெயகுமார்
திரு. S. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வத்தளை - ஹேகித்த

அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி

தேவஸ்தான

# பாலஸ்தாபன கும்பாபிஷேக

## திருப்பணி மலர்



**23.05.2010 ஞாயிற்றுக்கிழமை**

**காலை 7.26 - 9.26 வரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயகர் துதி

ஏக தந்தாயவித்மஹே
வக்ரதுண்டாய தீமஹீ
தன்நோ தந்திப பிரஜோதயாதே

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஒருமனதுடனினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெரும் நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
பேய் பிடியாதிருக்க வேண்டும்

மரபு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத்துள்
வளர் தலமோங்கு கந்தவேளே
தண்முகத்துய்யமணி உன்முகசசைவமணி
சண்முகத் தெய்வமணியே

**இராமலிங்க சுவாமிகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தாபன கும்பாபிஷேக

# கிரியா நிகழ்ச்சிகள்

**22.05.2010 சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு மேல்**

விநாயக வழிபாடு, அனுக்ஞை, கணபதி ஹோமம், வாஸ்துசாந்தி, கடஸ்தாபனம், கலாகர்ஷணம் யாக கிரியைகள்,பிம்பஸ்தாபனம், தீபாராதனை, சர்வாஞ்சலி, பேரசலனம் முதலியன நடைபெறும்.

**23.05.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிமுதல்**

புண்ணியாகவாசனம், யாகபூஜை, ஹோமம், பிம்பசுத்தி, திரவியாபிஷேகம், மஹா பூர்ணாகுதி, சர்வாஞ்சலி, தானங்கள், பாலஸ்தாபன கும்பாபிஷேகம் தொடர்ந்து விசேஷ பூஜை, பிரதிஷ்டா சங்கல்பப்பிரார்த்தனை, சிற்பி உபசாரம், நாள் வேலை ஆரம்பம், ஆசீர்வாதம் முதலியன இடம்பெறும். பிரசாதம் விநியோகத்தை தொடர்ந்து பிரதான ஆசார்ய, பரிபாலன சபையினர் முருகன் சன்னிதியில் அமர்ந்து, முருகனின் திருவருளால் கூடிய விரைவில் திருப்பணி வேலைகளை முடித்து மகா கும்பாபிஷேகத்தை நிறைவேற்றுவதாக உறுதி பூண்டு சங்கல்பம் செய்து, திருப்பணி நாள் வேலையும் ஆரம்பமாகும்.

கோவில் கிரியைகள் யாவும் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான பிரதம குரு சிவபதமடைந்த **சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்களின** அருள் ஆசியுடன் நடைபெறும்.

பாலஸ்தாபன கும்பாபிஷேக கிரியைகள் யாவும் முத்தமிழ் குருமணி
**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்**
சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் தேவஸ்தான பிரதம குரு
அவர்களின் வழிகாட்டலில் தேவஸ்தான பிரதம குரு
**வேதாகமமணி, சிவஸ்ரீ. சி. தியாகராஜ குருக்கள,**
**சிவஸ்ரீ இராம. பாலசுப்பிரமணிய குருக்கள்** ஆகியோரால்
கிரியைகள் யாவும் நிறைவேற்றி வைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனைய குருமார்கள்:

பிரம்மஸ்ரீ ஜெ. சிவகுமார சர்மா - தேவஸ்தான குரு

சிவஸ்ரீ ந. பாலச்சந்திரன் குருக்கள் (கொழும்பு)
பிரம்மஸ்ரீ தி. மதிமன்ன சர்மா (கொழும்பு)

அடியார்கள் யாவரும் இவ்விழாக் காலத்தில் பங்குபற்றி முருகன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வேலுண்டு வினையில்லை! மயிலுண்டு பயமில்லை!

*இப்படிக்கு*
*ஆலய பரிபாலன சபையினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புடையீர்!

கௌரவ / திரு / திருமதி ..............................................

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் வைகாசி மாதம்
09ஆம் நாள் (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை
தசமி திதியும் உத்தர நட்சத்திரமும் கூடிய
சுபமுகூர்த்த சுபவேளையில் வள்ளி தேவசேனா சமேதராய்
வீற்றிருக்கும் திருமுருகப் பெருமானுக்கும்,
மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும்
பாலஸ்தாபன கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற
திருவருள் பாலித்துள்ளது.

சுபநேரம் : காலை 7.26 முதல் 9.26 வரை

தாங்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி

இங்கனம்
ஆலய பரிபாலன
சபையினர்

அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்
தொ.பே. 2935619
www.wattalamurugan.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඕම්

ආරාධනාවයි

# වත්තල-හේකිත්ත
# අරුල් මිගු ශ්‍රී සිවසුබ්‍රමණිය සුවාමි දේවස්ථානයේ
# ප්‍රතිසංස්කරණ සංවර්ධන කටයුතු ආරම්භ කිරීම



පින්වත්නි!

ගෞරවනීය / මයා / මිය / මෙනෙවිය

..........................................................................................

23 05 2010 වන ඉරුදින පෙරවරු
07.26 සිට 9.26 දක්වා කාලය තුළ යෙදෙන
සුභ වේලාව තුළදී අප දේවස්ථානයේ ප්‍රතිසංස්කරණ සංවර්ධන
කටයුතු ආරම්භකිරීමේ පුන්‍ය කටයුත්ත
සිදුකෙරේ.

මෙම මහඟු අවස්ථාවට සහභාගී වන
මෙන් ආරාධනා කරමු.


ස්තුතියි.

මෙයට
දේවස්ථාන
පරිපාලන සභාව

අරුල් මිගු ශ්‍රී සිවසුබ්‍රමණිය සුවාමි දේවස්ථානය
2935619
www.wattalamurugan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Dear Devotee!

Mr / Mrs / Miss ........................................

The above ceremony would be undertaken at the Sri Siva Subramaniya Swamy Devasthanam on 23rd May, 2010 at the auspicious time between 07.26 - am and 9.26 am

We cordially invite all devotees to participate at this special event.

Thank you

Board of Trustees

Arulmigu Sri Siva Subramaniya Swamy Devasthanam
Tel : 2935619
www.wattalamurugan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வேதாகமமாமணி சிவாச்சார்யதிலகம்
# ஈஸான சிவாச்சாரியார், ஆலய குருக்கள்
# சிவஸ்ரீ எஸ்.கே. தியாகராஜக் குருக்கள் அவர்களின்

# ஆசியுரை

வத்தளை ஹேகித்தப் பதியில் அடியார்களின் வேண்டுதல்களை ஏற்று அவர்களின் தேவைகளை நிறைவேற்றி அருளாட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் கும்பாபிஷேகம் நிறைவுபெற்றுச் சுமார் 14 வருடங்கள் நிறைவெய்திய இந்த நேரத்தில் சில திருத்த வேலைகளும் புதிய சில கோவில்களும், வசந்த மண்டபம், ஸ்தம்ப மண்டபங்களும் கட்ட வேண்டி இருப்பதால் அவற்றை நிறைவேற்றுவதற்கு மூல மூர்த்தியையும், மற்றும் பரிவார தேவர்களையும் ஒரு பாலாலயம் கட்டி அங்கு பிரதிஷ்டை செய்து தான் திருத்த வேலைகளை செய்ய முடியும் என்பதனால் இன்று உள்ள சுபமுகூர்த்தத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்து ஒரு சிறிய இடத்தில் இருத்தி வழிபாடுகளை செய்து எங்கள் தேவைகளை கேட்கலாம்.

தற்பொழுது வானுயரக் கம்பீரமாக காட்சியளிக்கும் இராஜகோபுரம், மூன்று மாடிகளை கொண்ட அழகிய மணிமண்டபம் அடியார்களாகிய உங்கள் உதவியினால் நிறைவெய்திருக்கின்றன. அதேபோல மூலஸ்தானம் முதலான மற்றைய திருப்பணிகளையும் கூடிய விரைவில் முடித்து மஹா கும்பாபிஷேகம் செய்வதற்கு அடியார்களாகிய உங்களால் முடியும். ஆகவே அடியார்கள் ஒவ்வொருவரும் நீங்கள் உங்கள் மனதில் இருந்த முருகப்பெருமானை கூடிய சீக்கிரம் திருப்பணி வேலைகளை முடித்துக் கருவறையில் கும்பாபிஷேகம் செய்வோம் என்ற உறுதியை செய்து, அதற்குரிய செயலில் இறங்கி முருகப்பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்றும் அவன் திருப்பணி அதிவிரைவில் நிறைவுற வேண்டும் என்று பிரார்த்தித்து அவனது திருவருள் என்றென்றும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை

சர்வே ஜனா: சுகிநோ பவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரை

வத்தளை ஹேகித்தப் பதியில் கோவில் கொண்டு அடியார்களின் குறைகளை கேட்டு நிவர்த்தி செய்கின்ற அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய பெருமானினதும் ஏனைய பரிவார மூர்த்திகளினதும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இனிது நிறைவேறிக் கூடிய சீக்கிரம் திருப்பணி வேலைகள் முடித்துக் கும்பாபிஷேக பெருவிழா நடைபெற வேண்டுமென்று வள்ளி மணாளனாம் முருகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை

**சிவஸ்ரீ. இராமபாலசுப்பிரமணியக் குருக்கள்**
*ஆலய குருக்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# ஸ்தபதிகளின் சிந்தனையிலிருந்து

*வாழ்க வளமுடன்! அனைவருக்கும் வணக்கம்*

இலங்கைத் திருநாட்டின் வத்தளை, ஹேகித்த எனுமிடத்தில் வீற்றிருந்து எழில் மிகு தோற்றத்துடன் கூறும் அடியார்கள் வினைதீர்த்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ வள்ளி, தெஜாவள்ளி சமேதரர் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சுவாமி கோவில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இந்த ஆலயத்தை பற்றியும் இவ் ஆலய கட்டிட நிர்மான வேலைகளைப் பற்றியும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். இன்றுவரை இலங்கையில் அதிகமாக எம்பெருமான் முருகப்பெருமானுடைய ஆலயங்கள் திருப்பணி செய்து வருகிறேன். இதில் வத்தளை ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலும் அடங்கும். இந்த முருகப் பெருமானுக்கு என்று தனிச்சிறப்பு இருக்கிறது. இப்பெருமானுடைய பெருமையும், அருட்கடாட்ஷத்தையும் அனுபவித்தால் தான் தெரியும். இந்த ஆலயத்தில் புதிதாக (திரிதள) மூன்று நிலைகளைக் கொண்ட இராஜகோபுரம் கட்டப்பட்டுள்ளது. சிற்பக் கலையில் இது ஒரு தனிப்பட்ட வேலைப்பாடுகளைக் கொண்டது. மேலும் புதிதாக தகப்பன் சாமியின் அருட்கடாட்சத்துடன் பாலஸ்தாபனம் செய்து மூலஸ்தானமும் அதற்குரிய பரிவார தெய்வங்களும் புனரமைக்கப்படவுள்ளது. இலங்கையில் உள்ள ஸ்ரீ முருகப்பெருமானுடைய ஆலயங்களை விட இவ்வாலயம் வித்தியாசமான சிற்பக்கலை அமைப்புடன் உருவாகி வருகிறது. மேலும் இந்த ஊரைச் சார்ந்த மக்கள் அனைவரும் நலமாக வாழ ஸ்ரீ முருகப்பெருமானுடைய அருள் கிடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வேலுண்டு வினையில்லை, மயிலுண்டு பயமில்லை என்று வேண்டும் அடியார்கள் முன்வந்து இவ்வாலய திருப்பணியில் கலந்து இவ்வாலயத் திருப்பணியை முடித்து வத்தளை வாழ் மக்களுக்கு அம்பிகையின் பாலகன் அருள்பாலிக்க வேண்டும் என்று இந்த திருப்பணியை செய்ய முயற்சித்திருக்கும் அனைத்து அடியார் பெருமக்களையும், வாரி வழங்கக் கூடிய வள்ளல் பெருமக்களையும் எம்பெருமான் ஆசீர்வதிக்க வேண்டும். இவ்வாலய திருப்பணிக்கு வாரி வாரி நன்கொடை வழங்கி எம்பெருமானை அவருடைய இருப்பிடம் சேர்த்து கும்பாபிஷேகம் காண உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*இப்படிக்கு இவ்வாலய திருப்பணியில்*
*கலை சிற்ப சூடாமணி, சிற்ப சிந்தாமணி*
*சிற்ப கலா கேசரி, சிற்ப கலா ஞானபானு*
**விஸ்வ மஹீ செ.ச. சந்தனகுமார் ஸ்தபதி**
*திருப்புல்லாணி இராமநாதபுர மாவட்டம்,*
*தமிழ்நாடு, தென் இந்தியா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ விநாயகர்



காசி விஸ்வநாதர்



ஸ்ரீ மயூரன் பலிபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ மஹாலட்சுமி



ஸ்ரீ சண்டேஸ்வரர்




ஸ்ரீ துர்க்கை அம்மன்



ஸ்ரீ வைரவர்



ஸ்ரீ நாகபூசனி அம்மன்



ஸ்ரீ மஹா காளியம்மன்

சூலாயுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ ஆஞ்சநேயர்




ஸ்ரீ தட்சணாமூர்த்தி



ஸ்ரீ சந்தணகோபாலர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



எழுந்தருளும் உற்சவ மூர்த்திகளுடனான வசந்த மண்டபம்



ஸ்ரீ வள்ளி தேவசேனாவுடன்
வீற்றிருக்கும் சுப்ரமணியர் (மூலவர்)



நவக்கிரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வத்தளை ஹேகித்த
# அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

## கௌரவ காப்பாளர்கள்

| |
|---|
| திரு. R. கந்தசாமி |
| திரு. M. சுப்பிரமணியம் |
| திரு. K. தமிழ்வாணன் |

## நிருவாக சபை கௌரவ செயற்குழு அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| திரு. R. ரவி சிவகுமார் | (தலைவர்) |
| திரு. V. கங்காதரன் | (செயலாளர்) |
| திரு. V. ரவீந்திரன் | (பொருளாளர்) |
| திரு. S. ரவிச்சந்திரன் | (உப தலைவர்) |
| திரு. S. கணேந்திரா | (உப தலைவர்) |
| திரு. S. மகாலிங்கம் | (உப செயலாளர்) |
| திரு. V. ஜெயராஜ் | (இணைச் செயலாளர்) |
| திரு. P. நவராஜா | (உப பொருளாளர்) |
| திரு. A. ஆறுமுகம் | (செயற்குழு உறுப்பினர்) |
| திரு. S.M. ஜெயகுமார் | (செயற்குழு உறுப்பினர்) |

## கௌரவ உள்துறை நிர்வாக குழு அங்கத்தவர்கள்

| |
|---|
| திரு. S. ரவிச்சந்திரன் |
| திரு. R. ரவிசிவகுமார் |
| திரு. K. சந்திரன் |
| திரு. M. சிவராமலிங்கம் |
| திரு. V. சுப்பிரமணியம் |

## கௌரவ நிதிக் குழு அங்கத்தவர்கள்

| |
|---|
| திரு. V. ரவீந்திரன் |
| திரு. P. நவராஜா |
| திரு. R. ரவி சிவகுமார் |
| திரு. M. சுப்பிரமணியம் |
| திரு. M. சண்முகவேல் |
| திரு. A. செல்வராஜா |
| திரு. S.M ஜெயகுமார் |
| திரு. S. ஆறுமுகம் |

## கௌரவ கல்விக் குழு அங்கத்தவர்கள்

| |
|---|
| திரு. P. நவராஜா |
| திரு. R. ரவிசிவகுமார் |
| திரு. S. மகாலிங்கம் |
| திரு. S. ரவிச்சந்திரன் |

## கௌரவ திருப்பணி குழு அங்கத்தவர்கள்

| |
|---|
| **1. திட்ட ஆலோசனை** |
| திரு. R. ரவி சிவகுமார் |
| திரு. M. சுப்பிரமணியம் |
| திரு. K. தமிழ்வாணன் |
| திரு. S. கணேந்திரா |
| திரு. S. ஆறுமுகம் |

| |
|---|
| **2. நிதி பொருண்மியம் சேகரித்தல், கையாள்தல்** |
| திரு. V. ரவிந்திரன் |
| திரு. R. ரவி சிவகுமார் |
| திரு. P. நவராஜா |
| திரு. K. சந்திரன் |
| திரு. R. நித்தியகுமார் |
| திரு. S.M. ஜெயகுமார் |
| திரு. S. ரவிச்சந்திரன் |
| திரு. A. செல்வராஜா |
| திரு. S. மகாலிங்கம் |
| திரு. K. கணேசன் |

| |
|---|
| **3. மக்கள் தொடர்பு ஆலய/ சமூக நல்லுறவு** |
| திரு. V. கங்காதரன் |
| திரு. R. ரவிசிவகுமார் |
| திரு. K. கணேஷன் |
| திரு. V. ரவீந்திரன் |
| திரு. M. சிவராமலிங்கம் |
| திரு. K. பூவலிங்கம் |
| திரு. S. ரவிச்சந்திரன் |
| திரு. R. நித்தியகுமார் |
| திரு. V. ஜெயராஜ் |
| திரு. S. மகாலிங்கம் |
| திரு. V. சுப்பிரமணியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பரிபாலன சபையினரின் அன்பான வேண்டுகோள்

குகநேயச் செல்வர்களே!

வத்தளை ஹேகித்த அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் வள்ளி தேவசேனா சமேதராக வீற்றிருந்து எம்மையெல்லாம் அருளாட்சி செய்து நாம் எதிர்நோக்கிய அனைத்து இன்னல்களையும் இடர்தீர்த்து கருணை பொழிந்து வரும் எம்பெருமான் திருமுருகப்பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 23.05.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 தொடக்கம் 11.00 வரையுள்ள சுபவேளையில் வெகு சிறப்பாக நடைபெற திருவருள் கூடியுள்ளது. அதனைத் தொடர்ந்து ஆலய புனருத்தாரன திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்படுவதால் இந்நிகழ்வுகளில் தாங்களனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 40 ஆண்டு காலமாக வழிப்பாட்டு தளமாக இருந்த எமது ஆலயம், பல்வேறு இன்னல்களை கடந்து 1996ம் ஆண்டு மஹா கும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்தியமையை தாங்கள் நன்கு அறிவீர்கள். தங்களனைவரினதும் வழிபாட்டின் சக்தியாலும், வள்ளல் பொருந்திய மனங்களால் வழங்கிய நன்கொடைகளினாலும் ஒவ்வொரு பக்தரினதும் வேண்டுதலினாலும், நமது சமூக ஆர்வ முயற்சிகளினாலும் மேற்படி கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற உறுதுணையாக அமைந்ததை நன்றியுணர்வுடன் நோக்குகின்றோம்.

தற்போதும் திருமுருகப்பெருமானின் திருவருளாலும் தங்களது அளப்பரிய உதவிகளினாலும் எமது நிர்வாக சபையின் சிறந்த சேமிப்பின் பயனாகவும், மூன்று மாடிகளை கொண்ட மணிமண்டபக் கட்டிட தொகுதியையும், இராஜ கோபுரத்தையும் கட்டி முடித்திருப்பதுடன் இதர வேலைகளையும் செவ்வனே செய்து முடித்து, வத்தளை வாழ் இந்து சமுகத்தினருக்கு சிறப்பான மணிமண்டபத்துடன் கூடிய ஆலயமாக திகழ்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருப்பதை தாங்களுக்கு பெருமையுடன் அறியத் தருகின்றோம்.

சமூக வளர்ச்சியின் பயனாக தற்போது நமது அறநெறிப்பாடசாலை இருபது ஆசிரியர்களை கொண்டு தமிழ் மொழி மூலம் மட்டுமல்லாது ஆங்கில மொழி மூலமும் நடத்தப்பட்டு வருவதுடன், சர்வதேச நாடுகளிலும் எமது ஆலயத்தின் சிறப்பை எடுத்தியம்பும் முகமாக இணையத்தளம் ஒன்றினை ஆரம்பித்துள்ளமையையும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலங்களில் ஆலய பூஜைகளிலும் அபிஷேக உபயங்களிலும் தாங்கள் பக்தி உணர்வுடன் காட்டிய அக்கறையை மீண்டும் நன்றியுணர்வுடன் நோக்குகின்ற அதேவேளை தற்போது ஆரம்பிக்கப்படுகின்ற ஆலய நிர்மாண பணிகளுக்கு தாங்களது மனமார்ந்த ஒத்துழைப்பை நன்கொடையாக எதிர்பார்க்கின்றோம்.

மீண்டும் வானுயர்ந்து நிற்கின்ற இராஜகோபுரமும், அதனோடு இணைந்து அழகிய பொலிவுடன் திகழவிருக்கின்ற ஆலயத்தையும் தங்களுடைய பேருதவியை கொண்டு கட்டி முடித்து இரண்டாவது மஹா கும்பாபிஷேகத்தை இனிது சிறப்புடன் நடாத்துவதற்கு தாங்களும் துணையாக இருப்பீர்கள் என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

மேற்படி கோவில் நிர்மாண பணிக்காக ஏறத்தாழ நான்கு கோடி ரூபாயளவில் தேவைப்படுமென திட்டமிடப்பட்டுள்ளது. ஆதலினால் தாங்களும் தங்களது உற்றார், சுற்றார் அனைவரிடமும் இப்பேருதவிக்கான நன்கொடைகளை திரட்டுவதற்கு தாங்கள் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக உதவ முன்வருவீர்கள் என்பதில் திடமான நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

தாங்களும் இறைத்தொண்டில் எங்களுடன் இருந்தமைக்கு நிர்வாக சபையின் சார்பில் எமது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் எல்லாம்வல்ல எம்பெருமானின் திருவருள் குறைவின்றி கிடைக்க வேண்டுகின்றோம்.

தங்களது அன்பான சேவைக்கு இறைவனுடைய அருளாட்சியும், பெரியோர்களினது நல்லாசியும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

*இப்படிக்கு*
***ஆலய பரிபாலன சபையினர்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய திருப்பணிக்கான மொத்த செலவுகளும் விபரங்களும்

## 1. ஸ்ரீ திரிதள மூலஸ்தானம்

| | |
|---|---|
| அளவுகளின் படி கட்டு கட்டுவதற்கு மொத்த கூலிகள் | 250000 |
| பூச்சு பூசுவதற்கும் நைஸ் வேலைகள் செய்யவும் நாசித்தகைசார் செய்யவும் கூலிகள் | 350000 |
| பொம்மைகளின் மொத்தம் (32) 1 செய்ய 6000ம் ரூபாய் வீதம் 32 உருப்படிகளுக்கு மொத்தக் கூலிகள் | 192000 |
| இவைகள் அனைத்திற்கும் வர்ணம் தீட்டவும் கொட்டகை சாரம் கட்டவும் மொத்த கூலிகள் | 58000 |
| மூலஸ்தான மொத்த கூலிகள் | 850000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 1050000 |
| | 1900000 |

## 2. ஸ்ரீ மூலஸ்தான வாசல் முன்பக்கம் துவார கணபதி கோவில்

| | |
|---|---|
| பூச்சு பூசி நைஸ் வேலைகள் செயது பொம்மை செய்து வர்ணம் தீட்டிக் கொடுக்க மொத்த கூலிகள் | 35000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 35000 |
| | 70000 |

## 3. ஸ்ரீ சிவன் கோவில்

| | |
|---|---|
| பூச்சுப் பூசி நைஸ் வேலைகள் செய்து பொம்மை 3 செய்து வர்ணம் தீட்டிக் கொடுக்க மொத்த கூலிகள் | 35000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 35000 |
| | 70000 |

## 4. ஸ்ரீ அம்பாள் கோவில்

| | |
|---|---|
| பூச்சுப் பூசி நைஸ் வேலைகள் செய்து பொம்மை 3 செய்து வர்ணம் தீட்டிக் கொடுக்க மொத்த கூலிகள் | 35000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 35000 |
| | 70000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஸ்ரீ துவார பாலமுருகன் கோவில்

| | |
|---|---|
| பூச்சுப் பூசி நைஸ் வேலைகள் செய்து பொம்மை 3 செய்து | |
| வர்ணம் தீட்டிக் கொடுக்க மொத்த கூலிகள் | 35000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 35000 |
| | 70000 |

6. ஸ்ரீ மூலஸ்தானத்தை சுற்றி பஞ்ச கோஷ்டங்கள் செய்து

| | |
|---|---|
| வர்ணம் தீட்ட மொத்த கூலிகள் | 50000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 75000 |
| | 125000 |

7. ஸ்ரீ சுமித்திர சண்டேஸ்வரர் கோவில்

| | |
|---|---|
| பூச்சு பூசி நைஸ் வேலைகள் செய்து வர்ணம் தீடவும் கொடுக்க | |
| மொத்த கூலிகள் | 50000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 55000 |
| | 105000 |

8. ஸ்ரீ துஜஸ்தம்பம் ஸ்தமவிநாயகர் வாகன பலிபீடம்

| | |
|---|---|
| பூச்சப் பூசி நைஸ் வகைகள் செய்ய மொத்த கூலிகள் | 350000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 280000 |
| | 630000 |

9. ஸ்ரீ வசந்த மண்டப விமானம்

| | |
|---|---|
| பூச்சு பூசி நைஸ் வேலைகள் செய்து பொம்மைகள் செய்து | |
| வர்ணம் தீட்டிக் கொடுக்க மொத்த கூலிகள் | 350000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 325000 |
| | 675000 |

10. ஸ்ரீ மஹா லெட்சுமி கோவில்

| | |
|---|---|
| பூச்சு பூசி நைஸ் வேலைகள் செய்து பொம்மைகள் செய்து | |
| வர்ணம் தீட்டிக் கொடுக்க கூலி | 75000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 150000 |
| | 225000 |

11. ஸ்ரீ நவக்கிரக கோவில்

| | |
|---|---|
| பூச்சுப் பூசி நைஸ் வேலைகள் செய்து | |
| பொம்மை 9 செய்து வர்ணம் தீட்டிக் கொடுக்க மொத்த கூலிகள் | 150000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 127000 |
| | 277000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. ஸ்ரீ திரிதள இராஜகோபுரம் கட்டிட நிர்மாணம்

| | |
|---|---|
| மொத்த கூலிகள் | 1975000 |
| தேவையான பொருட்களின் பெறுமதி | 2500000 |
| | 4475000 |

## 13. ஆலய மஹா மண்டபத்தின் மேல் இராஜ கோபுர பக்கத்தில்

| | |
|---|---|
| வடக்கு பக்க கர்ணக்கூடு சாலகார திருவாசி வேலைகளுக்கும் கிழக்கு பக்க சாலகார வேலைகளுக்கும் கொட்டகை வர்ணம் தீட்டிக் கொடுக்க மொத்த கூலிகள். | 675000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 240000 |
| | 915000 |

## 13. ஸ்ரீ கன்னி விநாயகர் கோவில்

| | |
|---|---|
| வர்ணம் தீட்ட மொத்த கூலிகள் | 155000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 175000 |
| | 330000 |

## 14. ஆலய கோபுரவாசல் கதவு

| | |
|---|---|
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி கூலிகள் உட்பட | 650000 |

## 15. வடக்கு வாசல் சாலகார விமானம்

| | |
|---|---|
| இதற்கான கூலி | 75000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 100000 |
| | 175000 |

## 15. மணிக்கோபுரம்

| | |
|---|---|
| இதற்கான கூலி | 75000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 125000 |
| | 200000 |

## 16. மாமரத்து வேல்

| | |
|---|---|
| இதற்கான கூலி | 5000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 15000 |
| | 200000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17. ஆறுபடை வீடு**

| | |
|---|---|
| இதற்கான கூலி | 500000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 375000 |
| | 875000 |

**17. ஆஞ்சநேயர் ஆலயம்**

| | |
|---|---|
| இதற்கான கூலி | 25000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 50000 |
| | 75000 |

**18. மகாமண்டப வாசல் அலங்காரம்**

| | |
|---|---|
| இதற்கான கூலி | 125000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 150000 |
| | 275000 |

**19. மூலஸ்தான மரக்கதவு**

| | |
|---|---|
| இதன் பெறுமதி | 200000 |

**20. கோபுர/ஆலய கலசங்கள்**

| | |
|---|---|
| இதன் பெறுமதி | 200000 |

**21. ஸ்ரீ திரிதள இராஜ கோபுரம்**

| | |
|---|---|
| இதற்கான கூலி | 1975000 |
| இதற்கு தேவையான பொருட்களின் பெறுமதி | 2500000 |
| | 4475000 |

**22. ஆலய மகா மண்டபம்**

| | |
|---|---|
| இதற்கான மேல் கூரை, கொங்கிரிட், கம்பி, செட்லின், செங்கல், சீமேந்து ஆகியவற்றின் மொத்த பெறுமதி | 4000000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமும் அறநெறியும்

சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் அச்சமுதாயம் சார்ந்துள்ள மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளும், பண்பாடும் இன்றியமையாதன சமுதாய பண்பாடு சிறந்து விளங்குவதற்கு அறநெறிக் கருத்துக்கள் மிகவும் அவசியம். பண்டைக்காலத்தில் அறநெறிக் கருத்துக்களே மக்கள் சமூகத்தை சீராக வளர்ச்சி பெறச் செய்தன.

அறக் கருத்துக்களை கற்றுணர்ந்த எம்முன்னோர் அறவழியில் நின்று வாழ்க்கை நடாத்தி அதில் வெற்றியும் கண்டனர். ஆனால் இன்று அறக்கருத்துக்கள் என்றால் என்ன? அது எங்குள்ளது என்று கேட்கும் அளவுக்கு நமது இளையதலைமுறையினர் செயற்பாடு வளர்ந்து கொண்டு வருவது சைவ சமயிகளாகப் பிறந்த எமக்கு பெரும் வேதனையை தருகின்ற ஒரு விடயமாக அமைந்து விட்டது.

இக்குறையை நிவர்த்தி செய்து வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரின் உள்ளங்களில் ஆன்மிக உணர்வுகளையும், அறக்கருத்துக்களையும் போதிக்கும் நிலையங்களாகவே நாடளவிய ரீதியில் பல அறநெறிப்பாடசாலைகள் தோற்றம் பெற்றன.

இந்த வகையில் அறக்கல்வியை போதிக்கும் நிலையமாக ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் 1990ஆம் ஆண்டு ஓர் அறநெறிப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இருபது சிறார்களை மட்டும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது காலச்சக்கரத்தின் பரிணாம வளர்ச்சி பெற்று தற்போது நானூற்று ஐம்பது சிறுவர், சிறுமியர்களுக்கு அறக் கல்வியை புகட்டும் அறநெறிப்பாடசாலையாக மக்கள் மத்தியில் மிளிர்கின்றது.

சமய ஆற்றல் மிக்க பதினாறு ஆசிரியர்கள் இப்பாடசாலையில் அறநெறிக் கல்வியை புகட்டுகின்றார்கள். அறநெறிப்பாடசாலை ஆலய பரிபாலன சபையினரால் மிகவும் சிறப்பான முறையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு ஆலய பரிபாலன சபையினர் அயராது உழைத்து வருகின்றனர். மக்கள் மத்தியில் சிறப்பானதொரு ஆன்மீகச் சூழல் உருவாக வேண்டும் என்பதே இப்பாடசாலையின் முக்கிய குறிக்கோளாகும். அறநெறிப் பாடசாலையுடன் தொடர்புடைய பணிகளை முன்னெடுத்துச் செய்வதற்கு ஆலய அறங்காவலர்கள் தம்மால் இயன்ற உதவிகளை புரிகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கும் சைவ சமய மாணவர்களின் நலன் கருதி 2009ஆம் ஆண்டு தொடக்கம் ஆங்கில மொழி மூலமாக சைவ சமய பாடம் கற்பிக்கப்பட்டு வருகின்றமை வேறு எந்த அறநெறிப்பாடசாலைகளிலும் காணமுடியாத விசேட சிறப்பு அம்சமாகும்.

சமய பாடத்தை விட மேலதிகமாக இசை நடனம் போன்ற கலையுணர்வுகள் பிரதி பலிக்கின்ற பாட வகுப்புக்களும் மாணவர்களுக்கு இலவசமாக கற்பிக்கப்பட்டு வருகின்றன. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உறுதுணையுடன் நடைபெறுகின்ற சமய பாட பரீட்சைகளில் எம்முடைய அறநெறி பாடசாலை மாணவர்கள் கூடிய புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டங்களில் வெற்றிவாகை சூடியுள்ளார்கள். கலை நிகழ்ச்சிகள் பலவற்றிலும் பங்கேற்று பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்கள்.

அறநெறிப்பாடசாலை ஒன்று எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கு எமது அறநெறிப்பாடசாலை முன்னுதாரணமாக இருக்கின்றதென்றால் அதை யாராலும் எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது என்றே கூறலாம். அறநெறிப்பாடசாலை மாணவர்கள் அறநெறிச் சிந்தனைகளை ஆழமாகக் கற்றுத் தத்தம் வாழ்விற் கடைப்பிடித்தொழுக முன்வரவேண்டுமென்பதே இப்பாடசாலை ஆசிரியர்களினதும் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களினதும் பெரும் அவா ஆகும்.

"ஆலயம் செல்வோம்
அறப்பண்புகள் கற்போம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக அமையவுள்ள ஆலயம்
# பின்வருவனவற்றை கொண்டதாக அமையும்

1. மூலஸ்தானம்
2. காசி விஸ்வநாதர்
3. காசி விசாலாட்சி அம்பாள்
4. மயூர வாகன பலிபீடம்
5. ஸ்ரீ நர்த்தனகணபதி
6. ஸ்ரீ தெட்ஷனாமூர்த்தி
7. ஸ்ரீ பாலதண்டாயுதபாணி
8. ஸ்ரீ பிரம்மா
9. ஸ்ரீ சுமித்திர சண்டேஸ்வரர்
10. ஸ்ரீ துர்க்கை
11. ஸ்ரீ விநாயகர்
12. ஸ்ரீ சந்தான கோபாலர்
13. ஸ்ரீ மகாலக்ஷ்மி
14. ஸ்ரீ பாலமுருகன்
15. ஸ்ரீ வசந்த மண்டபம்
16. ஸ்ரீ நவக்கிரகம்
17. ஸ்ரீ மூன்றுதளஇராஜகோபுரம்
18. ஸ்ரீ வைரவர்
19. தலவிருட்சம்
20. ஸ்ரீ கருமாரியம்மன்
21. ஸ்ரீ மஹா காளியம்மன்
22. ஸ்ரீ நாகபூஷனி அம்மன்
23. ஸ்ரீ மகாவிஷ்ணு
24. ஸ்ரீ வழி பிள்ளையார்
25. ஸ்ரீ மடப்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்தனத்தால் அலங்கரிக்கப்பட்ட மூலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by : LUXMI GRAPHICS
Tele : 0115679060, 0728161257